செய்தி வெளியீடு எண்: 319 நாள் : 02.07.2015

<u>செய்தி வெளியீடு</u>

மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகார பகிர்வளிப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்துறை மற்றும் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோருக்கான அமைச்சகமும் இணைந்து புதுடெல்லியில் மாற்றுத்திறனாளிகளுக்கு தொழிற்பயிற்சி வழங்கி வேலை வாய்ப்பை உருவாக்குவதற்கான தேசிய செயல் திட்டத்தினை உருவாக்கியுள்ளது. இத்திட்டத்தின்படி அடுத்த 7 வருடத்திற்குள் 2.5 மில்லியன் மாற்றுத்திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பிற்கான தொழிற்பயிற்சியினை வழங்க திட்டமிட்டுள்ளது. இதற்கான பயிற்சி திட்டங்கள், பயிற்சி முறைகள் மற்றும் கண்காணிப்பு முறைகள் ஆகியவற்றை நவீன தகவல் தொழில் நுட்பத்தினை பயன்படுத்தி செயல்படுத்த திட்டமிட்டுள்ளது.

<u>**இரண் டு கட்ட தேசிய செயல் திட்டம்**</u>

1. முதல்கட்டமாக மாற்றுத்திறனாளிகளுக்கு தொழிற்பயிற்சி வழங்க முகமைகள் மற்றும் அனுபவமும் திறமையும் மிக்க நிறுவனங்களிடமிருந்து இத்திட்டத்தில் பங்கு கொள்ளும் ஆர்வத்தினை அறியும் பொருட்டு மத்திய அமைச்சகத்தில் தங்களுடைய நிறுவனங்களை பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும்.
2. இரண்டாவது கட்டமாக, அவ்வாறு பதிவு செய்து கொண்ட முகமைகள் தனியாக மாற்றுத்திறனாளிகளுக்கு பயிற்சி அளிக்கத் தேவையான நிதியுதவியினை கருத்துருவாக அனுப்ப வேண்டும். இது சம்மந்தமாக முழுவிவரம் இணையதளத்தில் முகவரியிடப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கான சமஉரிமை பாதுகாப்பு சட்டம் 1995 பிரிவு 52ன் கீழ் பதிவு செய்த தொண்டு நிறுவனங்கள் இத்திட்டம் தொடர்பாக மேலும் முழு விவரங்கள் பெற இத்துறையின் இணையதளத்தில் தொடர்பு கொள்ளவும்.

**இணை செயலாளர்**

திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோருக்கான அமைச்சகம்

மத்திய சமூக நீதி மற்றும் அதிகார பகிர்வளிப்பு அமைச்சகம்

5வது தளம், பரியாவரன்பவன், சி, ஜி, ஒ, வளாகம்,

லோடி சாலை, புதுடெல்லி – 110 003.

மின்னஞ்சல்: **disabilityskilltraining@gmail.com**

**மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர்**

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**